

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், கர்மவீரர் காமராஜர் அவர்களின் 122வது பிறந்தநாளை முன்னிட்டு 15.07.2024 அன்று சத்திரம் பேருந்து நிலையத்தில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு தெற்கு மாவட்ட கழக செயலாளரும் அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் மாநகர கழக செயலாளர் மு.மதிவாணன் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் சேகரன், துணை மேயர் திவ்யா, பகுதி கழகச் செயலாளர் மோகன், மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளை செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட மாநகர அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூரில்

## கலைஞர் நினைவு பூங்கா திறப்பு!

திருவள்ளூர், ஜூலை 18 – திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதிக் குட்பட்ட திருவள்ளூர் நகராட்சி 11 மற்றும் 13 வார்டில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் எம்ஜிஎம் நகர், ஏ.எஸ்.பி.நகரில் 80 லட்சத்தி 75 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு பூங்காவை நகர் மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன் தலைமையில் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் திறந்து வைத்து பூங்காவை பார்வையிட்டார். இதில் நகராட்சி ஆணையர் திருநாவுக்கரசு, நகராட்சி பொறியாளர் நடராஜன் உதவி பொறியாளர் சரவணன் நகர் மன்ற உறுப்பினர்கள் வி.இ.ஜான், பத்மாவதி ஸ்ரீதர் உள்பட நகரக் கழக நிர்வாகிகள் நகர மன்ற உறுப்பினர்கள் அரசு அதிகாரிகள் பொதுமக்கள், கழக முத்த முன்னோடிகள் பலர் கலந்து கொண்டனர்.



அரியலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்றத் தொகுதி, செந்துறை ஒன்றியத்திற்குட்பட்ட இரும்புலிக்குறிச்சி (வடக்கு) ஊராட்சியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில், கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கான ஆணைகளை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா மற்றும் பலர் உள்ளனர்.

காவிரி நடுவர் மன்றம், உச்சநீதிமன்றம் தீர்ப்புகளுக்கு எதிராக கருநாடக அரசு தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் தர மறுப்பதா?

# தஞ்சையில் திராவிடர் கழகம் சார்பில் அனைத்துக் கட்சி கண்டன ஆர்ப்பாட்டம்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஜூலை 18 -

காவிரி நடுவர் மன்றம், உச்சநீதிமன்றம் தீர்ப்புகளுக்கு எதிராக கருநாடக அரசு தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் தர மறுப்பதா? எனவும் தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் கூடிய அனைத்துக் கட்சிக் கூட்ட தீர்மானங்கள் மிகச் சரியானவை மட்டுமல்ல, தேவையானவையும்கூட எனவும் இதைக் கண்டித்து வரும் 23 ஆம் தேதி மாலை தஞ்சையில் திராவிடர் கழகம் நடத்தும் அனைத்துக் கட்சி கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவு தாரீர் எனவும் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

காவிரி நடுவர் மன்றம், உச்சநீதிமன்றத் தீர்ப்புகளுக்கு எதிராக, கருநாடக மாநில அரசு - தமிழ்நாட்டுக்குச் சட்டப்படி தர வேண்டிய காவிரி நீரைத் தர மறுப்பது சட்டப்படியும், நியாயப்படியும் சரியானதல்ல. தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் கூடிய சட்டமன்றக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மூன்று தீர்மானங்களும் முத்தானவை. தமிழ்நாட்டு மக்கள் உணர்வை வெளிப்படுத்த வரும் 23 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை தஞ்சாவூரில் திராவிடர் கழகத்தின் சார்பில் நடத்தப்படவிருக்கும் அனைத்துக் கட்சி கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவு கோரி திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காவிரி நதிநீர் பங்கீடு பிரச்சினையில், தமிழ்நாட்டின் உரிமைகளைப் பாதுகாத்திடும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது தலைமையில் நேற்று (16.7.2024) சட்டமன்ற கட்சித் தலைவர்களை அழைத்து, ஒரு கூட்டத்தினை தலைமைச் செயலகத்தில் கூட்டி, ஒருமனதாக மூன்று தீர்மானங்களை நிறைவேற்றி, சம்பந்தப்பட்டவர்களின் கவனத்தை நன்கு ஈர்த்துள்ளது என்பது காலமறிந்த கடமை உணர்வுக்கான செயல்பாட்டின் வெளிப்பாடு ஆகும்!

**காவிரி நடுவர் மன்றம், உச்சநீதிமன்றத் தீர்ப்புகளைப் புறந்தள்ளுவதா?**

1. காவிரி நடுவர் மன்றம் 5.2.2007 அன்று அளித்த இறுதித் தீர்ப்பையும், மாண்பமை உச்சநீதிமன்றம் 16.2.2018 அன்று அளித்த தீர்ப்பையும் அவமதிக்கும் வகையில், காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழு தற்போது ஆணையிட்டுள்ளவாறு தமிழ்நாட்டிற்கு காவிரி நீரைத் தர முடியாது என்று மறுத்துள்ள கருநாடக அரசிற்கு - இந்த அனைத்து சட்டமன்றக்கட்சிக் கூட்டம் தனது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

2. காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு மற்றும் மாண்பமை உச்சநீதிமன்ற ஆணையின்படி, தமிழ்நாட்டிற்குக் காவிரி நீரை உடனடியாக விடுவித்திட கருநாடக அரசுக்கு ஆணையிடுமாறு காவிரி நதிநீர்மேலாண்மை ஆணையத்தினை இந்த அனைத்து சட்டமன்றக் கட்சிக் கூட்டம் வலியுறுத்துகிறது.

3. காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித்தீர்ப்பு மற்றும் மாண்பமை உச்சநீதிமன்ற ஆணையின்படி, தமிழ்நாடு பெறவேண்டிய நீரை உடனடியாகப் பெறுவதற்கு, தேவைப்படின், மாண்பமை உச்சநீதிமன்றத்தை நாடி, அனைத்து சட்டபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள இக்கூட்டம் ஒருமனதாக தீர்மானிக்கிறது.

**கருநாடக அரசு நடந்துகொள்ளும் போக்கு நியாயமானதல்ல!**

- இந்த மூன்று முத்தாய்ப்பான தீர்மானங்கள், தற்போது தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு குறிப்பாக டெல்டா நீர்ப் பாசன விவசாயப் பெருமக்களுக்கு ஏற்பட்டிருக்கும் கடும் சோதனைகளையும், தற்போதுள்ள காவிரி ஒழுங்காற்றுக் குழுவின் முடிவுகள் எப்படி முந்தைய தீர்ப்புகள், தீர்வுகளுக்கு விரோதமான அவமதிப்பு என்பதையும், கருநாடக அரசின் முறையற்ற அரசியல் சண்டித்தனத்தின் கொடுமையையும், கண்டனம் செய்ததோடு, சட்டங்களுக்கு அப்பாற்பட்டு, மனிதநேயத்தை மறந்தோ, மறைத்தோ அல்லது மறுத்தோ நடந்துகொள்வது, கருநாடக அரசுக்கு நியாயமல்ல என்பதை யும் உணர்த்தியுள்ளது.

உச்சநீதிமன்றத்தின் ஆணை - தீர்ப்புகளை யும் கூட லட்சியம் செய்யாத அவமதிப்பு ஆணவப் போக்கு அல்லவா?

மூன்றாவது தீர்மானப்படி உச்சநீதிமன்றத்தை அணுகுவதுதான் சரியான இறுதித் தீர்வு.

ஒரு டி.எம்.சி. தண்ணீர் தரவேண்டும் என்று காவிரி ஒழுங்காற்றுக் குழுவின் ஆணையேகூட நியாயமற்ற ஒரு சார்பு ஆணையாகவே பாதிக்கப்பட்ட பலருக்கும் தெரிகிறது.

கொதிக்கும் மனநிலை தமிழ்நாட்டு டெல்டா விவசாயிகளிடம் கட்சி வேறுபாடின்றி உள்ளது. காவிரி நீர்ப் பங்கீடு சலுகையோ, பிச்சையோ அல்ல - அரசமைப்புச் சட்டப்படி தமிழ்நாட்டிற்கும், புதுச்சேரிக்கும் உள்ள உரிமையாகும்.

ஒவ்வொரு முறையும் உச்சநீதிமன்றம் செல்லும் நிலையை காவிரி ஒழுங்காற்று ஆணையமும், கருநாடக அரசும் தவிர்த்திட முனையாமல் தங்கள் விருப்பம் போல் நடந்துகொள்வது எவ்வகையில் சரியானதாகும்?

தமிழ்நாடு அரசு கூட்டிய இந்த அனைத்து அரசியல் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தை விளக்கியும், மேலும் பயிர்கள் பாசனத்திற்கு டெல்டா பகுதி விவசாயிகள் உரிமை பாதிக்கப்படாமல், நிரந்தரமாகக் காப்பாற்றப்படும் வகையிலும் வருகிற 23.7.2024 செவ்வாய் மாலை தஞ்சையில் ஒரு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு அனைவருக்கும் அன்பழைப்பு விடுத்துள்ளோம்!

இந்தப் பிரச்சினையில், அரசியல் மாச்சரியங்களைத் தள்ளி, ஆளுங்கட்சி, எதிர்க் கட்சிகள் என்று பிரிந்திருக்காமல், கருநாடக மாநிலத்தில் உள்ள ஒற்றுமை - தண்ணீர் தர மறுத்து ஒரே குரலில் ஒலிக்கும் பிடிவாதக் குரல் - அழிச்சாட்டியம் காட்டும் நிலையில், நாம் மட்டும் “எல்லோரும் அங்கு தனித்தனிதான், ஒருமனதாகி அவர்கள் நம்மை எதிர்ப்பதெங்கே?“ என்று கூறினால், அதைவிட கண்டிக்கத்தக்க, மக்கள் விரோதப் போக்கு வேறு இருக்குமா? என்று தமிழ்நாட்டுக் கட்சிகளும், தலைவர்களும் சிந்திக்கவேண்டும்.

**கருநாடக துணை முதலமைச்சரின் அதிர்ச்சியான அறிவிப்பு!**

கருநாடக துணை முதலமைச்சர் கூறியதாக ஒரு செய்தி சில தொலைக்காட்சிகளில் கண்டோம்.

“மேகதாது அணை கட்ட தமிழ்நாடு ஒப்புதல் தந்தால் ஒழிய, தண்ணீர் தர முடியாது“ என்று கூறியிருப்பதான செய்தி அது.

அச்செய்தி சரியாக இருப்பின், அதைவிட பெரும் அரசமைப்புச் சட்ட மீறல், சட்ட விரோத அறிவிப்பு வேறு என்னவாக இருக்கும்?

சர்வாதிகார, எதேச்சதிகாரத்திலிருந்து ஜனநாயகத்தை மீட்டெடுக்கத் தொடர்ந்து போராடும் இந்தியா கூட்டணியின் ஒற்றுமைக்கு உலை வைக்க இந்த காவிரிப் பிரச்சினையை முதலீடு ஆக்கிக் கொள்ளும் நப்பாசையோடு - தி.மு.க.வின் தொடர் வெற்றிகளைக் கண்டு அரண்டு போய் உள்ள அரைவேக்காடு அரசியல் தலைவர்களும், ஆரியமும் “சிண்டு முடியும்”வழமையான ஆயுதத்தையும் காட்ட முனைந்துள்ளனர். இதை அவர்கள் உணர்ந்து நடந்துகொள்ள வேண்டாமா?

**உரிமைகளை வென்றெடுக்க ஒன்றிடுவோம்!**

அதையும் தமிழ்நாட்டு மக்களிடம் புரிய வைத்து, நம் உரிமைதனை கடித்த, கடிக்கும் ஆரியப் பாம்பின் படமெடுத்தாடலுக்கும் இடந்தராமல், நம் உரிமைகளை நாம் வென்றெடுக்க முனையவேண்டும்!

எனவே, பல நோக்கு கவனப் பார்வையுடன் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவது அவசியம், அவசரம்!

இவ்வாறு கி.வீரமணி அவர்கள் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.





நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட, 3 வது வார்டு கிறிஸ்டோபர் நகர் விரிவாக்கம் (சாஸ்தான் கோவில் ரோடு), தென்றல் நகர் ஆகிய பகுதிகளில் புதிதாக கட்டப்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையத்தின் கட்டுமானப் பணிகளை கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின் போது நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, இளநிலை பொறியாளர் தேவி, சுகாதார அலுவலர் ராஜா, மாமன்ற உறுப்பினர் அ.அருள் சபிதா ரெக்ஸலின், மாநகராட்சி அதிகாரிகள், பகுதி செயலாளர் சேக்மீரான் உட்பட கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

நில அபகரிப்பு வழக்கில் கைது செய்யப்பட்ட

# அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் திருச்சி சிறையில் அடைப்பு!

## ஜூலை 31 வரை காவல்! கரூர் நீதிமன்றம் உத்தரவு!

கரூர், ஜூலை 18-

ரூ.100 கோடி மதிப்புள்ள 22 ஏக்கர் நிலமோசடி புகாரில் முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கருக்கு ஜூலை 31ம் தேதி வரை நீதிமன்றக் காவலில் வைக்க கரூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 1 நீதிபதி பரத்குமார் உத்தரவிட்டதை அடுத்து அவர் நேற்று (ஜூலை 17ம் தேதி) காலை திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

கரூரில் உள்ள மேலக் கரூர் சார்பதிவாளர் (பொ) முகமது அப்துல் காதர் கரூர் நகர காவல் நிலையத்தில் அளித்த புகாரில், போலி சான்றிதழ் கொடுத்து மோசடியாக பத்திரப் பதிவு செய்ததாக யுவராஜ், பிரவீண், ரகு, சித்தார்த்தன், மாரப்பன், செல்வராஜ், ஷோபனா ஆகிய 7 பேர் மீது 8 பிரிவுகளின் கீழ் கடந்த மாதம் 9ம் தேதி போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

இவ்வழக்கில் தானும் சேர்க்கப்படலாம் என்ற அடிப்படையில் முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் கரூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் கடந்த மாதம் 12ம் தேதி மற்றும் ஜூன் 30ம் தேதி என இரு முறை முன்ஜாமீன் கேட்டு மனு தாக்கல் செய்த நிலையில் இரு மனுக்களும் தள்ளுப்படி செய்யப்பட்டது.

இந்நிலையில் கடந்த மாதம் 12ம் தேதி முதல் விஜயபாஸ்கர் தலைமறைவானார்.

சார்பதிவாளர் அளித்த நில மோசடி புகார் வழக்கு கடந்த மாதம் 14ம் தேதி சி.பி.சி.ஐ.டி.க்கு மாற்றி உத்தரவிடப்பட்டது. நில உரிமையாளர் ஷோபனாவின் தந்தை பிரகாஷ் அளித்த புகாரில் வாங்கல் போலீஸார் முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர், அவரது சகோதரர் சேகர், பிரவீண் உள்ளிட்ட 13 பேர் மீது 6 பிரிவுகளின் கீழ் கடந்த 22ம் தேதி வழக்குப் பதிவு செய்தனர்.

முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கரின் ஆதரவாளர் மற்றும் அவரது வீடு, நிறுவனங்களில் கடந்த 5, 7, 11ம் தேதிகளில் சி.பி.சி.ஐ.டி. போலீஸார் சோதனை செய்தனர். மேலும் விஜயபாஸ்கர் மனைவி விஜயலட்சுமியிடமும் விசாரணை நடத்தினர். மேலும் ஏராளமானோரிடம் சி.பி.சி.ஐ.டி. அலுவலகத்துக்கு வரவழைத்து விசாரணை நடத்தினர்.

விஜயபாஸ்கர், அவரது சகோதரர் ஆகியோர் முன்ஜாமீன் கேட்டு கடந்த 15ம் தேதி உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். இந்நிலையில் கடந்த 5 வாரங்களாக தலைமறைவாக இருந்த முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் மற்றும் வழக்கின் முக்கிய நபரான பிரவீண் ஆகியோரை சி.பி.சி.ஐ.டி. போலீஸார் கேரளா மாநிலம் திருச்சூரில் நேற்று முன்தினம் காலை 6 மணிக்கு கைது செய்து கரூர் திண்ணப்பா நகரில் உள்ள சி.பி.சி.ஐ.டி. அலுவலகத்திற்கு மதியம் 2.30 மணிக்கு அழைத்து வந்தனர்.

இதையடுத்து அங்கு அதிகளவில் அ.தி.மு.க.வினர் திரண்டதால் போலீஸார் பேரிகார்டுகள் வைத்து சி.பி.சி.ஐ.டி அலுவலகம் உள்ள சாலையில் யாரும் செல்ல முடியாத வகையில் தடுப்புகள் அமைத்தனர். மேலும் பலத்த போலீஸ் பாதுகாப்பும் போடப்பட்டது.

விஜயபாஸ்கர், பிரவீண் இருவரும் போலீஸ் வாகனத்தில் கரூர் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்திற்கு நேற்றிரவு 12.15 மணிக்கு அழைத்து வரப்பட்டு கரூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 1ல் நீதிபதி பரத்குமார் முன் ஆஜர்படுத்தப்பட்டனர். இருவரையும் ஜூலை 31ம் தேதி வரை நீதிமன்ற காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார்.

இதையடுத்து நேற்று (ஜூலை 17ம் தேதி) அதிகாலை 4.15 மணிக்கு நீதிமன்றத்தில் இருந்து எம்.ஆர்.விஜயபாஸ்கர், பிரவீண் வெளியே அழைத்து வரப்பட்டனர். போலீஸ் வாகனத்தில் அழைத்து செல்லப்பட்டு விஜயபாஸ்கர் திருச்சி மத்திய சிறையிலும், பிரவீண் குளித்தலை கிளை சிறையிலும் அடைக்கப்பட்டனர்.

நாகர்கோவில் மாநகராட்சிப் பகுதியில் புதிதாகக் கட்டப்பட்டு வரும்

# நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையத்தின் கட்டுமானப் பணிகள்!

## மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் ஆய்வு!

நாகர்கோவில், ஜூலை 18-

நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட, 3 வது வார்டு கிறிஸ்டோபர் நகர் விரிவாக்கம் (சாஸ்தான் கோவில் ரோடு), தென்றல் நகர் ஆகிய பகுதிகளில் புதிதாக கட்டப்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையத்தின் கட்டுமானப் பணிகளை கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும், அப்பகுதியில் சிறிய பாலம் அமைக்க வேண்டிய இடத்தையும் மாநகராட்சி அதிகாரிகளுடன் ஆய்வு செய்தார்.

அதனை தொடர்ந்து, 4வது வார்டு பெருவிளை பழைய ஊராட்சி மன்றம் அருகில் படிப்பகம் கட்டுவதற்கான இடத்தை தேர்வு செய்வது தொடர்பாக பார்வையிட்டு ஆய்வு செய்தார். ராஜலெட்சுமி நகரில் அமைந்துள்ள பூங்கா மற்றும் நூலகத்தை ஆய்வு செய்து அங்கு மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து தேவையான நடவடிக்கை மேற்கொள்ள அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார்.

ஆய்வின் போது நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, இளநிலை பொறியாளர் தேவி, சுகாதார அலுவலர் ராஜா, மாமன்ற உறுப்பினர் அ.அருள் சபிதா ரெக்ஸலின், மாநகராட்சி அதிகாரிகள், பகுதி செயலாளர் சேக்மீரான் உட்பட கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

பூவிருந்தவல்லியில்

## மக்களுடன் முதல்வர் திட்டம் தொடக்கம்!

பூவிருந்தவல்லி, ஜூலை 18 –

பொதுமக்களின் குறைகளை உடனுக்குடன் தீர்க்கும் வகையில் பூவிருந்தவல்லி ஒன்றியம் குத்தம்பாக்கம், படூர், செம்பரம்பாக்கம் வெள்ளவேடு, ஆகிய ஊராட்சிகள் அடங்கிய மக்களுடன் முதல்வர் முகாம் வயலாநல்லூர் சமுதாய கூடத்தில் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, முகாமை துவக்கி வைத்து பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் கோரிக்கைகளை கேட்டு அறிந்து மனுக்களை பெற்றுக் கொண்டார். இதில் திருவள்ளூர் மாவட்ட ஊராட்சி குழு துணை பெருந்தலைவர் டி.தேசிங்கு, வட்டாட்சியர் கோவிந்தராஜன், வட்டார வளர்ச்சி தலைவர் வெங்கடேசன், ஒன்றிய குழு துணைத் தலைவர் பரமேஸ்வரிகந்தன், ஒன்றிய கவுன்சிலர் என்.பி.மாரிமுத்து மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், ஜெர்த்தலாவ் கிராமம்,பாரதியார் நகர் அருகில் நேற்று முன்தினம் எதிர்பாராதவிதமாக இரண்டு தனியார் பேருந்துகள் நேருக்கு நேர் மோதிக்கொண்ட விபத்தில் பலத்த காயமடைந்து தர்மபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் 22 நபர்களுக்கு முதலமைச்சர் – கழகத்தலைவர் அவர்கள் அறிவித்தபடி முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூபாய் 1 இலட்சம் வீதம் 22 பேருக்கும் ரூ.22 இலட்சத்திற்கான காசோலையினை தருமபுரி மாவட்ட மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கி.சாந்தி, தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஆ.மணி ஆகியோர் நேரில் சென்று காசோலையினை வழங்கினர். உடன் தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி.வெங்கடேஸ்வரன்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கிழக்கு மாவட்டச் செயலாளர் தடங்கம் பெ.சுப்பிரமணி,முன்னாள் அமைச்சர் மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன், நகர்மன்ற தலைவர் திருமதி.லட்சுமி நாட்டான் மாது அரசு தருமபுரி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.அமுதவல்லி, வருவாய் கோட்டாட்சியர் திருமதி.காயத்ரி, உள்ளிருப்பு மருத்துவ அலுவலர் மரு.நாகேந்திரன், கண்காணிப்பாளர் மரு.சிவகுமார் தர்மபுரி வட்டாட்சியர் சண்முக சுந்தரம், அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.